# தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டில் பக்கீர் பைத் - அம்பாறை மாவட்ட பக்கீர்களை மையப்படுத்திய ஆய்வு

**மு.அ.அப்துல் ஆபித்**

தமிழ் முதுதத்துவமானிக் கற்கை நெறி மாணவன்,
மொழித் துறை, கலை மற்றும் கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
abdhulaabith@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கலை இலக்கியங்கள் செழித்தோங்கி வளர்ந்த பிரதேசங்களுள் இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டமும் ஒன்று. இப்பிரதேச முஸ்லிம்களின் பண்பாட்டு அடையாளம் என்பது எம். ஏ. நு.ஃமான், மருதூர். ஏ. மஜீத், எஸ். எச். எம். ஜெமீல், எஸ். முத்து மீரான், றமீஸ் அப்துல்லாஹ் போன்ற பல ஆய்வாளர்களால் நிறுவப்பட்டள்ளது. இருப்பினும் தமிழ் ஆய்வுப் பரப்பினுள் தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டில் தனித்துவம் மிக்கதாய் விளங்கும் பக்கீர்களின் கலை இலக்கியச் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்படத்தக்க ஆய்வுகள் இடம்பெறவில்லை என்றே கூறலாம். இதனடிப்படையில் ஆய்வுப் பயணத்தில் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பக்கீர்களுடைய கலை இலக்கியச் செயற்பாடுகள் மற்றும் சமயக் கிரியைகள் சார்ந்த அனைத்திற்கும் அடிநாதமாக விளங்கும் 'பக்கீர் பைத்' பற்றியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கம் 'பக்கீர் பைத்' தென்கிழக்கு முஸ்லிம்களது பண்பாட்டோடு கொண்டுள்ள தொடர்பினை இனங்காண்பதாகும். இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளாக அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது வாழ்ந்து வரும் பக்கீர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகப் பெறப்பட்ட தகவல்களும், பங்குபற்றல் சார் கள அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பக்கீர்கள் பற்றியும் அவர்களது கலைகள் பற்றியும் நூல்கள்களில் வெளியான குறிப்புக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக கடந்த காலங்களில் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளல், நோன்பு காலங்களில் அதிகாலையில் துயிலெழுப்புதல், திருமண நிகழ்வு, விருத்த சேதன நிகழ்வு, மார்க்கச் சொற்பொழிவு, வீடுகளில் விஷேட அழைப்பு, றாதிப் நிகழ்வு ஆகிய சந்தர்ப்பங்களில் பக்கீர் பைத் பாடப்பட்டு வந்துள்ளதையும் சமகால சூழலில் நோன்பு காலங்களில் அதிகாலையில் துயிலெழுப்புதல், அதிதிகளை வரவேற்றல், றாதிப் நிகழ்வுகள், வீடுகளில் விஷேட அழைப்பு ஆகிய சந்தர்ப்பங்களில் பக்கீர்பைத் இடம்பெறுவதையும் இனங்காண முடிந்தது. ஒட்டு மொத்தமாக நோக்குகையில் பக்கீர்பைத் முஸ்லிம்களின் பண்பாட்டில் காத்திரமான வகிபாகத்தை செலுத்துகின்றது.

**திறவுச் சொற்கள் :** பக்கீர் சமூகம், பக்கீர்பைத், தென்கிழக்கு முஸ்லிம்கள், பண்பாடு

**அறிமுகம்**

உலகின் பல பாகங்களிலும் இஸ்லாமிய ஆத்மஞான வழியில் (சூ.ஃபித்துவம்) வந்த சிறு சமூகக் குழுக்களாக பக்கீர்கள் வாழ்ந்து வருகின்றனர். தென்னாசியச் சூழலில் முகம்மது நபி (ஸல்) அவர்களது சிந்தனை பல்வேறு நிலக்காட்சிகளுக்குள்ளால் ஊடாடி, குறித்த சமூகங்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், மொழிகள் ஆகியவற்றுடன் கலந்து தனித்துவமான இஸ்லாமியப் பண்பாடு உருவானதில் இவர்களின் பங்களிப்பும் உண்டு. இவர்களின் நிறுவன ரீதியான தோற்றம்

கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் ஈராக்கின் பக்தாத் நகரில் உதயமான காதிரிய்யா சூ.ஃ.பி நெறி வழியாகவே ஆரம்பமானது.

இலங்கையில் பக்கீர் சமூகத்தினர் நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டுள்ளனர். பாத யாத்திரிகளாக அலைபாயும் நாடோடி வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட இவர்கள் இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாற்றுச் சின்னங்களாகக் கருதப்படும் பாவா ஆதம் மலை, பலாங்கொடை தப்தர் ஜெய்லானி ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பினை இன்றும் பேணி வருகின்றனர். இந்நாட்டில் இவர்கள் சொற்பத் தொகையினராக வாழ்ந்தாலும் கடந்த காலங்களில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, புத்தளம், மன்னார் போன்ற இலங்கையின் பல பாகங்களிலும் அழியாத பண்பாட்டு வெளியினைக் கொண்ட ஒரு சமூகமாக வாழ்ந்து வந்துள்ளனர். அது மாத்திரமன்றி ஒரு காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்காக இருந்த அம்பாறையிலேயே இவர்கள் மையம் கொண்டிருக்கின்றனர்.

தென்கிழக்கு முஸ்லிம்களின் வழக்கில் ‘பாவா’, ‘பக்கீர் பாவா’ என்றெல்லாம் அழைக்கப்படும் இவர்கள் தலைப்பாகை, கழுத்தில் மாலைகள், நீண்ட முடி, தோளில் ஒரு பை, கையில் ‘தஹறா’ ஆகிய தேற்றத்துடன் மக்களின் வீடு வாசல்களை அணுகி பைத் பாடி உணவுப் பொருட்களை அல்லது பணத்தைப் பெற்றுச் செல்வதும், நோன்பு காலங்களில் அதிகாலையில் பாடலுடன் தஹறா கொட்டி துயிலெழுப்புவதும் மறக்க முடியாதவை.

பண்பாடு பற்றி விளக்கும் பக்தசவத்சல பாரதி ஈ.பி.டைலர் அவர்களின் பின்வரும் கருத்தை முதன்மைப்படுத்துகிறார்: ‘‘பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதயாத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்’’(1999:ப.152). இதன்படி, முஸ்லிம் சமூகத்தினுள் வாழும் பக்கீர்களின் ஆன்மீக நம்பிக்கையுடன் அல்லது சமயக் கிரியைகளுடன் தொடர்புபட்ட ‘பக்கீர் பைத்’ எனும் கலை தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது.

சூ.ஃ.பித்துவம் வரலாறு நெடுகிலும் கவிதை, நடனம், இசை எனக் கலை இலக்கியங்களின் பன்முகங்களோடு மக்களை சந்தித்து உறவாடி வந்திருப்பதைக் காணலாம். அந்த வகையில் சூ.ஃ.பித்துவ நெறி வழி வந்த பக்கீர்கள் ஆன்மீக ஆற்றுகைக் கலைஞர்களாக விளங்குகின்றனர். இவர்கள் இஸ்லாமிய மயப்பட்ட ஓர் ஊடகப் பணியினை பக்கீர்பைத் வாயிலாக மேற்கொண்டிருக்கின்றனர். சமகால சூழலில் பக்கீர்பைத் ஓர் விளிம்பு நிலைக் கதையாடலாக மாற்றம் கண்டிருந்தாலும், ஒரு காலத்தில் அது தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டில் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

‘பைத்’ என்பது பா அல்லது பாடலைக் குறித்து நிற்கின்றது. ‘பக்கீர் பைத்’ என்பது பாடலையும், தஹறா இசையினையும் கொண்டே வரையறை செய்யப்படுகின்றது. பாடல்கள் எனும் போது இஸ்லாமிய சரித்திரங்கள், பக்கீர்களால் இயற்றப்பட்ட தனிப்பாடல்கள் மற்றும் ஏலவே இயற்றப்பட்ட மெய்ஞ்ஞான இலக்கியங்களின் பகுதிகள் ஆகியன உள்ளடங்குகின்றன. இவற்றை பக்கீர்கள் தஹறாவினை இசைத்து இராகத்துடன் பாடுகின்ற போது ‘பக்கீர் பைத்’ என அழைக்கப்படுகின்றது. இதன் தலையாய நோக்கம் மார்க்க நல்லுபதேசங்களை மேற்கொள்தலும் சமுதாயத்தை நல்வழிப்படுத்த லுமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் பக்கீர்களின் வருகை இடம்பெற்ற காலத்திலிருந்து பக்கீர்பைத் எனும் கலை நிகழ்ந்திருந்தாலும் 19, 20ம் நூற்றாண்டுகளிலேயே அது நன்கு செழித்தோங்கியது எனலாம். அந்தவகையில், மருதமுனை, கல்முனை, நற்பட்டிமுனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் பரவலாக 'பக்கீர் பைத்' பாடப்பட்டு வந்துள்ளது. அன்றைய நாட்களில் தென்கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பெரும் ஆதரவுடன் இக்கலை பேணப்பட்டு வந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

- 'பக்கீர் பைத்' தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டோடு கொண்டுள்ள தொடர்பினை இனங்காணல்.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு விளிம்பு நிலையிலுள்ள பக்கீர்களை மையப்படுத்திய பண்பு சார் ஆய்வாகும். இவ்வாய்வுக்காகப் பனிப்பந்து மாதிரி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் ஆரம்பத்தில் பக்கீர்கள் பற்றிய எத்தகைய முறையான தரவுகளும் காணப்படாமையினால், முதலில் ஒரு பக்கீரை இனங்கண்டு, அவரிடம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொண்டு, ஆய்வுக்கு அவசியமான தகவல்களைப் பெறக்கூடிய ஏனைய பக்கீர்களின் விபரங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறு ஒருவரை அணுகி, அவரிடம் தகவல்களைப் பெற்று, அவரினூடாக இன்னுமொருவரை அணுகல் என்ற அடிப்படையில் பத்து பக்கீர்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதன்படி, அம்பாறை மாவட்டத்தில் அண்ணளவாக 25 – 30 வரையிலான பக்கீர்கள் மாத்திரமே சில பிரதேசங்களில் சிதறி வாழ்ந்து வரும் செய்தியை அறிய முடிந்தது. இவ்வாய்வில் பக்கீர்களிடமிருந்து முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள முறை சாரா நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, பங்குபற்றல் சார் கள அவதான முறையும் பின்பற்றப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளாக பக்கீர்கள் பற்றியும், பக்கீர் பைத் பற்றியும் நூல்களில் பதிவாகியுள்ள சில குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையின் பண்பாட்டுச் சூழலில் பக்கீர் பைத் குறித்து விரிவான ஆய்வுகள் இடம்பெறாவிட்டாலும் கடந்த காலங்களில் அது பற்றிய சில குறிப்புக்கள் நூல்களில் பதிவாகியுள்ளன. அந்த வகையில் எம்.எஸ்.றம்சீன் தனது 'இஸ்லாமியக்கலைகள்' என்ற நூலில் பக்கீர் பைத் பற்றிய தனது கருத்தினைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"பக்கீர் பைத் அல்லது றபான் அடித்தல் என்பது கொட்டிப் படித்தல் எனவும் அழைக்கப்படும். ஒருவரோ, பலரோ சேர்ந்து றபானை அடித்துக் கொண்டு நூறு மசலாப் பாடல்களைப் பாடுவர்"(1999: ப.17)

இப்பதிவில் பக்கீர் பைத் பற்றிய தெளிவான விளக்கம் காணப்படாவிட்டாலும், பக்கீர்கள் பைத்துக்காக 'நூறு மசலா'வைப் பாடும் வழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

மேலும் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் 'இலங்கை முஸ்லிம் நுண்கலை' எனும் நூலில் பக்கீர் பைத் பற்றிய மிகச் சுருக்கமான அறிமுகமொன்றை வழங்கியுள்ளார்.

"பாவாக்கள் அல்லது பக்கீர்கள் எனத் தம்மை வரையறுத்துக் கொண்டோரின் பாடலும், 'தஹ்ரா' கட்டையின் தாள ஒலியும் 'பக்கீர் பைத்' என்று அழைக்கப்படுகின்றது. பாவாக்களின் தஹரா

இசையையும் பாடல்களையும் மக்கள் விரும்பிக் கேட்டனர். விஷேட தினங்களில் மேடை போட்டு அவர்களின் பாடல்களைக் கேட்கும் வழக்கமும் இருந்தது''(2007:ப.74)

இக்கருத்தினூடாக, பக்கீர் பைத் முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்குடன் காணப்பட்டமையினை அறிய முடிகிறது.

ஆய்வாளர் ஏ.பி.எம். இத்ரீஸ் தனது அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் (2007:ப.169) என்ற நூலில் பக்கீர் பைத்தின் மூல இசைக்கருவியான 'தஹறா' நோன்பு காலங்களில் அதிகாலையில் துயில் எழுப்புவதற்கான அறிவித்தல் ஊடகமாகக் கையாளப்பட்டு வருவதை இஸ்லாமிய மயப்பட்ட ஊடக நிலையில் வைத்து நோக்குகின்றார்.

மேற்குறிப்பிட்ட நூல்களில் இடம்பெற்றுள்ள குறிப்புக்கள் அனைத்தும் பக்கீர் பைத் சார்ந்த துளிர் நிலைக் கருத்தாடல்களாக அமைந்தனவே தவிர, அவை முஸ்லிம் பண்பாட்டோடு பக்கீர் பைத் கொண்டுள்ள தொடர்பு குறித்து விரிவான தளத்தில் நோக்கவில்லை. அத்தோடு, தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டில் பக்கீர் பைத் குறித்த பிரத்தியேகமான கருத்தாடல்களும் அவற்றுள் இடம்பெறவில்லை. இத்தகைய ஆய்வு இடைவெளியினைக் கருத்திற்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பண்பாட்டில் பக்கீர் பைத்தின் ஊடாட்டம் குறித்த தகவல் திரட்டலின் போது, கடந்த காலங்களில் பக்கீர் பைத் தென்கிழக்கு வாழ் முஸ்லிம் சமூகத்தில் நிகழ்த்தப்பட்டு வந்த சந்தர்ப்பங்கள், சமகாலத்தில் பக்கீர் பைத் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆய்வுப் பயணத்தில் கிடைக்கப் பெற்ற தகவல்களை ஒப்பீட்டு ஆராய்ந்த போது, அவற்றைப் பின்வரும் கருப்பொருள்களின் (Themes) அடிப்படையில் ஒழுங்குபடுத்தி விளக்கலாம்.




**1. குடும்ப வைபவங்களில் பக்கீர் பைத்**

i. திருமண நிகழ்வு

திருமண நிகழ்வுகளில் பக்கீர்பைத் பாடும் வழக்கம் இருந்துள்ளது. திருமண நிகழ்வுகளுக்காக மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டார்கள் பக்கீர்மார்களைப் பயன்படுத்தியுள்ளனர். திருமணத்திற்கு முன்பு பெண் வீட்டார்கள் தானியங்கள் உட்பட பல பரிசுப்பொதிகளுடன் மாப்பிள்ளை வீட்டுக்கு செல்லும் வழக்கம் இருந்தது. (இன்று 'பெட்டி கொண்டு செல்லுதல்' என இதனை அழைப்பர்) பெண்களே இதில் அதிகம் காணப்படுவர். இவ்வேளை பக்கீர்மார்கள் முன்னே பைத் பாடிச் செல்ல, பெண் வீட்டார்கள் அவர்களைத் தொடர்ந்து வருவர். மாப்பிள்ளையின் வீட்டு வாசலை அடைந்ததும் பெண்வீட்டாரை உள்ளே நுழைய விடாமல் நின்று கொண்டு பக்கீர்மார்கள் பைத் பாடிக்கொண்டே இருப்பர். மாப்பிள்ளை வீட்டார் அவ்விடம் சில அன்பளிப்புக்களை வழங்கியதும் பெண்வீட்டாரை உள்ளே செல்ல வழிவிடுவர். இதே போன்று திருமணத்திற்கு முந்திய நாளன்று மாப்பிள்ளை வீட்டார்கள் (பெண்கள்) மருதாணி வைப்பதற்காக மணப் பெண்ணுடைய வீட்டுக்குச் செல்லும் போதும் பக்கீர் பைத் பாடப்படும்.

திருமண வைபவ தினத்தன்று மாப்பிள்ளை பெண் வீட்டை அடைந்ததும், அமைக்கப்பட்டிருக்கும் பந்தலின் கீழ் ஒரு கதிரையில் அமர்த்தப்படுவார். மாப்பிள்ளை கதிரையில் அமர்ந்ததிலிருந்து தாலி கட்டச்செல்லும் வரைக்கும் பக்கீர்மார்களால் மகுஷூக்கு மாலையின் (1966) விருத்தங்கள் மற்றும் பக்கீர்கள் இயற்றிய வாழ்த்துப் பாடல்கள் என்பன பாடப்படும். தாலி கட்டிய பின்னரும் மணமக்களை வாழ்த்தி பக்கீர் பைத் பாடப்பட்டுள்ளது. பக்கீர்மார்களின் பணி இத்தோடு நின்று விடவில்லை. திருமண நாளன்றிலிருந்து சில இரவுகள் விடிவிடிய நபிமார்கள், தோழர்கள் மற்றும் இறைநேசர்களின் சரித்திரங்களைப் பாடல்களாகப் பாடுவர்.

ii. சுன்னத் கல்யாண வீடுகள் (விருத்த சேதன நிகழ்வு)

சுன்னத்து கல்யாண வீடுகள் பக்கீர் பைத்களால் அதிகம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அந்நாட்களில் வாழ்வு கல்யாணம் போலவே சுன்னத் கல்யாண நிகழ்வுகளும் இடம்பெற்றன. கத்னா செய்யப்படவிருப்பவர் மாப்பிள்ளைக் கோலத்தில் அலங்கரிக்கப்பட்டு (சுன்னத் மாப்பிள்ளை) மேசையில் அல்லது கதிரையில் அமர்த்தப்படுவார். இவ்வேளை குடும்பத்தார் உட்பட பலரும் அவருக்கு அன்பளிப்புக்களைக் கொண்டுவந்து கொடுப்பர். இவ்வாறு அன்பளிப்புக்கள் வழங்கும் பகுதி நிறைவுறும் வரை பக்கீர் பைத் பாடப்படும். பின்னர் தர்காக்கள், ஸியாரங்கள் மற்றும் பள்ளிவாயல்களில் காணிக்கை செலுத்துவதற்காகவும் சுன்னத் மாப்பிள்ளையை பக்கீர் பைத் பாடியே அழைத்துச் செல்வர். அது மாத்திரமன்றி கத்னா செய்யப்பட்ட பின்பு தொடராக ஒரு சில இரவுகளில் 'நூறு மசலா' போன்ற சரித்திரங்கள் பக்கீர்மார்களால் பாடப்படும். கத்னா செய்யப்பட்டவர் வலியினை மறந்திருக்கவும், ஏனையோரை முழிப்புச் செய்யவும் இவை பெரிதும் உதவின.

iii. விஷேட அழைப்புக்கள்

பக்கீர்மார்கள் விஷேட அழைப்பின் பேரில் வீடுகளுக்குச் சென்று ஞானப் பதங்களைப் பாடும் வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். இதனை அவர்கள் கச்சேரி என்றும் அழைப்பதுண்டு. பதம் பாடுவதற்காக இவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானக் கீர்த்தனங்கள், இலக்கியங்கள், மாலைகள் என்பவற்றைப் பயன்படுத்துவர். வீடுகளில் அருள் நிறைந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் பல திக்ர் சலவாத்துக்களுடன் இவை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

**2. சமூக வெளி அரங்குகளில் பக்கீர் பைத்**

i. கதாப்பிரசங்க நிகழ்வு

புராண சரித்திரங்கள் கூறுவதே கதாப்பிரசங்கம் எனப்படும். பக்கீர்மார்கள் இதனைத் தனித்த ஒரு கலையாக நோக்குகின்றனர். விஷேட நாட்களில் ஊர்களில் மேடை அமைத்து இஸ்லாமிய

சரித்திரங்களை பக்கீர்கள் கதைப் பாடல்களாகப் பாடும் மரபு இருந்து வந்துள்ளது. பெரும்பாலும் இரவு வேளைகளிலேயே இது இடம்பெற்று வந்துள்ளது. சாய்ந்தமருதில் வாழ்ந்த சபூர் முகைதீன் பாவா, அக்கரைப்பற்றில் வாழ்ந்த பகுறுத்தீன் பாவா ஆகியோர் கதா பிரசங்கத்தில் புகழ் பெற்று விளங்கியவர்களாகும். தற்பொழுது சாய்ந்தமருதில் வாழ்ந்து வரும் ஹுசைன் காதர் பாவா இக்கலையில் நன்கு தேறியவராக விளங்குகிறார். சாய்ந்தமருது சேகு இஸ்மாயீல் பாவா, பொத்துவில் இப்றாஹீம் பாவா ஆகியோரும் சரித்திரங்களைக் கதைப்பாடல்களாகப் பாடும் திறன் கொண்டவர்களே.

ii. பெரியோர்களின் மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வுகள்

பிரபல்யமான மார்க்க அறிஞர்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் இடைவேளைகள் வழங்கப்படும். இவ்வேளைகளில் பேசப்படும் விடயத்தை மையப்படுத்தியோ அல்லது மக்களை உற்சாகப்படுத்தும் வகையிலோ பக்கீர்கள் தஹரா இசையுடன் பாடல்களைப் பாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். நீண்ட நேர சொற்பொழிவுகளின் போது கூட்டத்தைக் கலையாது வைத்திருக்கவும், அடுத்த உரைக்கிடையில் கேட்போரின் ஆவலைத் தூண்டவும் பக்கீர் பைத் உதவியாய் அமைந்தது.

iii. றாதிப் நிகழ்வு

கொடியேற்ற சமஸ்தானங்களில் றிபாய் றாத்திப் ஆரம்பமாவதற்கு முன்னர் பக்கீர்கள் ஞானப் பாடல்களைப் பாடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். அது மாத்திரமன்றி றிபாய் றாதிபில் குத்து வெட்டு மேற்கொள்ளும் போதும் சில முனாஜாத்துக்களைப் பாடுவர். இவை பக்கீர்கள் மத்தியில் 'ஹாழிர் பைத்' என வழங்கப்படுகின்றன.

iv. விஷேட அதிதிகளை வரவேற்றலும் வாழ்த்திப் பாடலும்

அரசியல் மற்றும் ஏனைய சமூக நிழ்வுகளில் விஷேட அதிதிகளை வரவேற்பதற்காக பக்கீர் பைத் பாடப்பட்டு வந்துள்ளது. அது மாத்திரமன்றி, நிகழ்வுக்கு வருகை தந்த சிறப்பு அதிதியினை வாழ்த்தி, அவரைப் புகழ்ந்து பக்கீர்கள் பாடல்களைப் பாடுவர். அவ்வேளை வாழ்த்திப் பாடப்பட்ட அதிதி பக்கீருக்குப் பணப் பரிசில்களை வழங்குவதுண்டு.

**3. ஜீவனோபாய ஈட்டலில் பக்கீர் பைத்**

i. ஸதகாவினைப் (நன்கொடை) பெற்றுக் கொள்ளல்

பக்கீர் பாவாக்கள் மக்களின் வீடு வாசல்களுக்குச் சென்று இஸ்லாமிய சரித்திரங்களையும், தனிப்பாடல்களையும் தஹரா கொட்டிப் பாடுவர். அந்நாட்களில் மக்கள் இதனைப் பெரிதும் விரும்பியுள்ளனர். இவ்வேளை நன்கொடையாக மக்களிடமிருந்து பெறுபவற்றைக் கொண்டு பக்கீர்கள் தமது அன்றைய நாளையும் போதுமாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இது பக்கீர்களின் ஜீவனோபாய ஈட்டல் சார்ந்த செயற்பாடாக அடையாளப்படுத்தப்ப ட்டாலும், பக்கீர்கள் மத்தியில் அகந்தையினை நீக்குவதற்கான ஓர் ஆன்மீகப் பயிற்சியாகவே நோக்கப்படுகின்றது.

பக்கீர்கள் மக்களின் வீடு வாசல்களை நாடி பைத் பாடும் மரபில் பொருள் முதல் தேவையினையும் கடந்த சமூகப்பணி இடம்பெற்றுள்ளது. அவர்கள் ஒவ்வொரு வீடுகளுக்குச் செல்லும்போதும், அங்குள்ளவர்களின் மனநிலையைக் கற்பவர்களாகவும், குடும்பங்களில் இடம்பெறக்கூடிய பிரச்சினைகள், முரண்பாடுகள் பற்றிய கூர்மையான அவதானிகளாகவும் இருந்துள்ளனர். எனவேதான் அவர்களது தனிப்பாடல்களில் குடும்ப முரண்பாடுகள் சார்ந்த அம்சங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம். (பின்னிணைப்பு - 01)

**4. நோன்பு காலங்களில் பக்கீர் பைத்**

i. நோன்பு காலங்களில் அதிகாலையில் துயிலெழுப்புதல்

முஸ்லிம் சமூகத்தில் இதனை 'ஸஹர் அரட்டுதல்' என்பர். கடிகார அலார வசதிகளும், ஒலிபெருக்கி வசதிகளும் சமூகப் பயன்பாட்டிற்கு வராத காலத்திலிருந்து நோன்பு காலங்களில் துயிலெழுப்பும் உன்னத பணியினை எத்தகைய எதிர்பார்ப்பும் இன்றி பக்கீர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். அதிகாலை வேளை சுமார் இரண்டு மணியளவில் கண்விழித்து, அருகில் ஒருவர் வெளிச்சத்துக்காக இலாம்பு ஒன்றினை ஏந்திவர, பக்கீர் ஒருவர் தஹறா இசையுடன் பாடல்களைப் பாடுவார். இவ்வாறு பாடப்படும் பாடல் 'சஹர் பைத்' என அழைக்கப்படும்.

உதாரணம்: " அல்லாஹ் உகந்தவராம் - முகம்மது
ஆதிதன் தூதர் மேல் வசல்லிம்
(அல்லாஹுªம்ம சல்லி)
(நேர்காணல்: ஹுªசைன் காதர் பாவா)

சஹர் பைத்துக்காக சில பக்கீர்கள் றிபாய் நாயகங்கள் பேரில் பாடப்பட்ட முனாஜாத்தினையும் பாடுவர்.

**5. சமகாலத்தில் பக்கீர் பைத்**

i. கடந்த காலங்களில் பக்கீர் பைத் தென்கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும், காலப்போக்கில் அது தனது பிரதான பாடுகளங்களை விட்டு நீங்கவேண்டியதாயிற்று. அந்த வகையில் சமகால சூழலில் விஷேட அழைப்பு நிமித்தம் வீடுகளிலும், கொடியேற்ற சஸ்தானங்களில் இடம்பெறும் றாதிப் நிகழ்வுகளிலும், விஷேட அதிதிகளை வரவேற்பதற்காகவும், நோன்பு காலப்பிரிவில் நோன்பு நோற்பதற்கு அதிகாலையில் துயிலெழுப்புவதற்காகவும் பக்கீர் பைத் பாடப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பட்ட கருப்பொருள்களின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முடிவுகள் தொடர்பில் பின்வரும் கருத்துக்கள் கவனத்திற்குரியனவாகும்:

1. குடும்ப வைபவங்களான திருமண நிகழ்வு, சுன்னத் கல்யாண நிகழ்வு ஆகியவற்றில் பக்கீர் பைத் பாடும் மரபு வழக்கொழிந்து போயுள்ள நிலையில், தற்பொழுது விஷேட அழைப்பின் பேரில் மாத்திரம் பக்கீர்கள் அக்கரைப்பற்று, சாய்ந்தமருது ஆகிய ஊர்களில் ஒரு சில வீடுகளில் பைத் பாடிவருகின்றனர்.

2. சமூக வெளி அரங்குகள் என்ற வகைப்பாட்டினுள் நோக்கும் போது, மேடையமைத்து கதாப்பிரசங்கம் செய்யும் வழக்கு சமகாலத்தில் இல்லை. அதே போல, மார்க்கச் சொற்பொழிவுகளின் போதும் பக்கீர் பைத் பாடும் வழக்கம் மறைந்துவிட்டது. ஆயினும், கொடியேற்ற சமஸ்தானங்களில் இடம்பெறும் றாதிப் நிகழ்வுகளின் போதும், விஷேட அதிதிகளை வரவேற்பதற்காகவும் பக்கீர் பைத் இடம்பெற்று வருகின்றது.

3. ஒரு காலத்தில் பக்கீர்களின் பிரதான பாடுகளமாக மக்களின் வீடு வாசல்களே கருதப்பட்டன. ஆயினும் வீடுவாசல்களை அணுகி, பக்கீர் பைத் பாடி, நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளும் வழக்கு இல்லாமல் போய்விட்டது. பக்கீர்கள் வெறுமனே இரந்து உண்ணும் கூட்டத்தினராக நோக்கப்பட்டதும், போலி பக்கீர்களின் ஊடுருவலும் இதற்கு முக்கிய காரணிகளாக அமைந்தன.

4. பக்கீர்களின் சுதந்திர ஊடகப்பணியான நோன்பு காலங்களில் சஹர் பைத்துடன் துயிலெழுப்பும் செயற்பாடு நவீனத்துவத்தின் வருகையோடு அருகிப்போனாலும், சாய்ந்தமருது, அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று ஆகிய ஊர்களின் சில எல்லைகளில் இன்றும் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பட்ட பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் நோக்கும்போது, கடந்த காலங்களில் தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டில் பக்கீர் பைத் கணிசமான வகிபாகத்தை செலுத்தியுள்ளது எனும் கருத்து மேலும் வலுப்பெறுவதைக் காணலாம்.

''பக்கீர் பைத் வழக்கொழிந்து போய்விட்டது'' அல்லது ''அது காலாவதியாகிவிட்டது'' எனும் நிலைப்பாடு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பொதுத்தளத்தில் உறைந்திருக்கின்றது. அத்தகைய நிலைப்பாட்டில் தொடங்கிய ஆய்வுப்பயணத்தில் ஆய்வினை மேற்கொள்ளும் போதும், இறுதியிலும் கண்டு கொண்ட முக்கியமான ஒரு உண்மை, பக்கீர் பைத் முஸ்லிம்களின் பண்பாட்டிலிருந்து அழியவில்லை என்பதே. கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் பக்கீர் பைத் மக்களோடு நேரடியாக உறவாடி வந்த முக்கியமான பாடுகளங்களை விட்டு நீங்கியுள்ளதே தவிர, அது இன்றும் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. பக்கீர்கள் வாழும் காலமெல்லாம் பக்கீர் பைத்தும் முஸ்லிம்களின் பண்பாட்டில் பங்களிப்புச் செய்து கொண்டே இருக்கும் என்ற நிதர்சனமான உண்மையும் இங்கு பதிவுசெய்யவேண்டியுள்ளது.

இன்று இலங்கை வாழ் சிறுபான்மை சமூகங்கள் பண்பாட்டு ரீதியான காலனித்துவங்களை எதிர் கொண்டிருக்கும் வேளையில், உள்ளூர் மொழி, கலை, இலக்கியம் ஆகிய பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டே அவற்றை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மறுபுறம் முஸ்லிம் சமூகத்தினுள்ளேயே முஸ்லிம்களின் இலக்கிய வடிவங்கள் புறமொதுக்கப்படும் நிலை தோன்றியுள்ள சூழலில், முஸ்லிம் மரபின் வேர்களைத் தேடிப் பாதுகாக்க வேண்டியதோடு மட்டுமல்லாமல், பக்கீர் பைத் வாயிலாக இத்தகைய இலக்கியங்களின் நிலைத்திருப்பு மீட்டுருவாக்கம் செய்து பேணப்படலும் அவசியமானது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப யூடியூப் (Youtube) போன்ற ஓரிரு இணையதளங்களில் சில பக்கீர் பைத்கள் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு சில பைத்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றினூடாக, ஓரளவுக்கு ஆவணப்படுத்தலை மேற்கொள்ள முடியுமே தவிர, ஒரு மரபு வழிவந்த ஜனரஞ்சகக் கலையாக விளங்கும் பக்கீர் பைத்தினைத் தொடர்ச்சியாகப் பேண முடியாது. எனவே, ஆய்வுச் சமூகமான பக்கீர்களை வலுவூட்ட வேண்டிய தேவையும் உள்ளது. அந்த வகையில், இலங்கை முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பக்கீர்களுக்காக போட்டிகளை நடாத்துதல் போன்ற சில வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை இங்கு நினைவுகூரத்தக்கது.

பக்கீர்களை அழைத்து பல்கலைக்கழக வட்டாரத்தினுள் பக்கீர் பைத் கலையினை நிகழ்த்திக்காட்ட வாய்ப்பளித்தல் (மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா கல்லூரியைப் போல), ஒரு நாடகத்தினுள் பக்கீர் பைத்தினை உள் நுழைப்பது பற்றி சிந்தித்தல், நாட்டார் கலைகளும் பாடல்களும் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தினுள் உட்புகுத்தப்பட்டி ருப்பது போல பக்கீர்சமூகத்தின் கலை இலக்கியச் செயற்பாடுக ளையும் பாடத்திட்டங்களுள் இணைப்பதற்கான முயற்சிகளை உயர்கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ளல் போன்றன பக்கீர்களின் கலைகள் தொடர்ந்து பேணப்படுவதற்கும், அவை மீட்டுருவாக்கம் செய்யப்படுவதற்கும் ஏதுவாக அமையும். அது மாத்திரமன்றி பக்கீர் சமூகம் பற்றியும், அவர்களது கலைகள் பற்றியும் மேலும் நுண்மையான ஆய்வுகளை செய்வதற்குப் பல்கலைக்கழக

மாணவர்களை ஊக்குவிப்பதனூடாக, விளிம்புநிலைப்பட்டுள்ள இலங்கை முஸ்லிம்களின் பண்பாடு தொடர்பில் மேலும் காத்திரமான ஆவணங்களைக் கண்டடைய முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அனஸ்,எம்.எஸ்.எம்.,(2007), இலங்கையில் முஸ்லிம் நுண்கலை: ஒரு விமர்சன ஆய்வு, கொழும்பு:குமரன் புத்தக இல்லம்.
2. அஜ்மல்கான்,பீ.மு., உவைஸ்,ம.மு.,(1997), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு - தொகுதி நான்கு, மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
3. இத்ரீஸ்,ஏ.பி.எம்., (2007), அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள், வாழைச்சேனை:உயிர்ப்பைத் தேடும் வேர்கள்.
4. பக்தவத்சல பாரதி, (1999), பண்பாட்டு மானிடவியல், சென்னை:மணிவாசகர் பதிப்பகம்.
5. ஷரீப் றம்சீன்,எம்., (1999), இஸ்லாமியக் கலைகள், வவுனியா:மதார் உம்மா வெளியீடு,
6. ஜெமீல்,எஸ்.எச்.எம்.(பதிப்.), (1997), அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள், கொழும்பு: கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமயகலாசார அலுவல்கள் திணைக்களம்.
7. Jameel,S.H.M., Asiff Hussein (Ed.), (2011), The Muslim Heritage of Eastern Sri Lanka, Colombo:Muslim Women's Research and Action Forum.


**நேர்காணல் மேற்கொள்ளப்பட்டோரின் விபரம்.**

1. அமீர் அலிஷா பக்கீர் (சேகு இஸ்மாயீல் பாவா / இஸ்மாலெவ்வை அப்துல் மஜீத்), மாளிகைக்காடு, கிழக்கு - 02, (ஜனவரி 09, 2018).
2. கல்பதுல்லாஷா பக்கீர் (சுலைமான் லெவ்வை முகம்மது அமீம்), சம்மாந்துறை – 02, (ஜூன் 23, 2018)
3. திக்ருல்லாஷா பக்கீர் (நஜ்முல் ஹுசைன்டீன்), அக்கரைப்பற்று – 01, (ஒக்டோபர் 10, 2017).
4. தவ்லதுல்லஷா இனாயதுல்லா பக்கீர் (நிஜாமுத்தீன் பாவா/ ஸைனுல் ஆப்தீன் ஹாஜா நிஜாமுத்தீன்), அக்கரைப்பற்று – 04, (டிசம்பர் 24, 2017)
5. பக்கீர் நிலைப் பெயர் : மவ்ஜூத் அலிஷா (ஜுனைதீன் பாவா/ முகம்மது இஸ்மாயீல் ஹாஜா ஜுனைதீன்), அக்கரைப்பற்று – 15, (டிசம்பர் 05, 2018)
6. றஹ்மதுல்லாஹ்ஷா பக்கீர் (மசூர்தீன் பாவா), அட்டாளைச்சேனை – 16, (ஜனவரி 06, 2018)
7. நூறுல்லாஷா பக்கீர் (சஹாப்தீன் பாவா), பொத்துவில் - 06, (ஜூன் 23 2018).
8. முபாறக் அலிஷா பக்கீர் (முகம்மது இஸ்மாயீல் ஆதம்பாவா), அக்கரைப்பற்று – 01, (ஒக்டோபர் 09, 2017)
9. ஹபீப் அலிஷா பக்கீர் (ஹுசைன் காதர் பாவா / சேகு அப்துல் காதர் ஆதம்பாவா), சாய்ந்தமருது - 12, (டிசம்பர் 12,2017).
10. ஹிந்தில் அலிஷா பக்கீர் (இப்றாஹீம் பாவா/ உதுமான் லெவ்வை இப்றாஹீம்), பொத்துவில் - 06, (ஜனவரி 04, 2018)

**பின்னிணைப்பு – 01**

கோழிக்குஞ்சுப் பாட்டு

**பக்கீர்:** கோழிக்குஞ்சி எண்ட கோழிக்குஞ்சி
நீயும் குதித்தோடி மேய்ந்து வந்த கோழிஞ்சி
எட்டுப்பணம் விக்க பஞ்சத்தில – ஒன்ன

கட்டி வளத்தேனே கோழிக்குஞ்சி
குப்பத் திடலுக்கெல்லாம் கோழிக்குஞ்சி – நீ
குதித்தோடி மேய்ந்து வந்த கோழிக்குஞ்சி
சண்டக்கார வீட்டையெல்லாம் - நீ
சமாதானம் பண்ணி வந்த கோழிக்குஞ்சி

**கோழிக் குஞ்சு:** என்ன வளத்திட்ட மாதரசி
எனக்கொரு மாளிகை கட்டித்தந்தாள்
தீனியும் தண்ணீரும் தந்து – அம்மை
சிறப்புடன் வாழ்ந்துவரும் நாளையில

சம்பந்தக் கிளையார் வந்ததென்று – என்னை
சதி நினைக்கச் செய்தாளோ
துரத்தி என்னப பிடிக்கையில – பெரும்
தொந்தரவு வந்ததென்றெண்ணிக் கொண்டேன்.

நாரெடுத்து ரெண்டு காலக் கட்டும்போது- இது
ராஜா விலங்கெண்டு எண்ணிக் கொண்டேன்
கூடப் பெட்டியெடுத்துக் கவுக்கும் போது
கூடாரம் வாய்ச்சதென்று எண்ணிக்கொண்டேன்
முதலாம் நாள் ஒரு கனவு கண்டன்
பாங்கு செல்லும் ஓச என்ன அழைக்கக் கண்டன்
ரெண்டாம் நாள் ஒரு கனவு கண்டன
ரெண்டு பக்கம் கத்தியொண்டு தீட்டக்கண்டன்

மூண்டாம் நாள் ஒரு கனவு கண்டன்
அடுத்த ஊட்டுப் பையன அழைக்கக் கண்டன்
எறகயும் செறகயும் பையன் புடிக்க
கழுத்த இழுத்து மோதின் அறுத்துவிட்டான்.

**பக்கீர்:** பஞ்சிகள் வெட்டுதே கோழிக்குஞ்சி
பரலோகம் போகுதே கோழிக்குஞ்சி
துள்ளிக்குதித்த கோழிக்குஞ்சி - இப்ப
சுருண்டு மடிகிறதே கோழிக்குஞ்சி

அறுத்து உரித்து சட்டியில் போட்டு
சாதங்கள்தான் சமைத்து வைத்தாள் - அதுல
மருமகளுக்கு வேணுமெண்டு
மதிப்பா கோப்பயில் எடுத்து வைத்தாள்

முழங்கால் முள்ளொண்டத் தானெடுத்து -பழைய
மாமியா கையில 'மொட்டெண்டு' போட்டாள்
மொட்டெண்ட சத்தம் காதில் கேட்டு-மாமியா

தொட்டுத் துளாவி எலும்பக் கண்டு

நான் வளத்த கோழிய அறுத்துப் போட்டு
முள்ளயாடி நீ போட்டாயெண்டு
மாமியார் தலமுடி மருமகள் கையில
மருமகள் தலமுடி மாமியார் கையில